**செப்டம்பர் – 06**

# TNPSC துளிகள்

- ❖ இந்தியப் பிரதமர், ஜப்பானிய பிரதமர் ஷிகெரு இஷிபாவுடன் சேர்ந்து டோக்கியோவிலிருந்து செண்டாய் வரையிலான பயணத்தை மணிக்கு 300 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய ஜப்பானின் ஷின்கான்சென் அதிவேக விரைவு இரயிலில் பயணம் செய்தார்.
- ❖ இந்தியாவின் 29வது பொதுக் கணக்குத் தணிக்கையாளராக T.C.A. கல்யாணி நியமிக்கப் பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் அறிவித்தது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு திறன் பதிவேடு

> ❖ Happy to launch the Tamil Nadu Skill Registry under @naan_mudhalvan skill initiative. This one-stop platform connects students, job seekers, employers & industries.
>
> ❖ With 13.7 lakh+ profiles from Engineering, Arts & Science, Diploma & ITI streams, industries can now access a skilled talent pool, post jobs & recruit faster.
>
> ❖ Youth benefitted under our Naan Mudhalvan Scheme are encouraged to update their profiles regularly at https://naanmudhalvan.tn.gov.in/tnskillregistry to stay visible & competitive.
>
> ❖ Our #DravidianModel Government is committed to empowering TN's youth with global opportunities & lasting growth.

- ❖ நான் முதல்வன் திறன் முன்னெடுப்பின் கீழ் தமிழ்நாடு துணை முதல்வர் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் தமிழ்நாடு திறன் பதிவேட்டை (TNSKILL) தொடங்கி வைத்தார்.
- ❖ இந்த டிஜிட்டல் தளம் பொறியியல், கலை மற்றும் அறிவியல், பட்டயம் மற்றும் தொழில்துறை பயிற்சி நிறுவனம் ஆகியப் பிரிவுகளைச் சேர்ந்த 13.7 லட்சத்திற்கும் மேற்பட்ட இளையோர்களின் சரிபார்க்கப்பட்ட சுயவிவரங்களை வழங்குகிறது.
- ❖ தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்பட்ட குரல் தேடல் மற்றும் உரையாடு மென்பொருள் (சாட்போட்) உதவியைப் பயன்படுத்தி திறமையான நபர்களைத் தேட தொழில்துறைகள் மற்றும் முதலாளிகளுக்கு TNSKILL உதவுகிறது.
- ❖ இந்தத் தளமானது, தமிழ்நாட்டின் திறமையான இளையோர்களை வேலை வாய்ப்புகளுடன் திறம் மிக்க முறையில் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஜெர்மன் மாகாணம் மற்றும் தமிழ்நாடு கூட்டாண்மை

- ❖ ஜெர்மன் மாகாணமான வடக்கு ரைன்-வெஸ்ட்பாலியா (NRW) மற்றும் தமிழ்நாடு ஆகியவை நீடித்த நிலையான மேம்பாடு, தொழில்துறை வளர்ச்சி மற்றும் புதுமை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வலுவான கூட்டாண்மையைப் பகிர்ந்து கொண்டன.
- ❖ இரு பிராந்தியங்களும் பொருளாதார ஒத்துழைப்பை வளர்ப்பது, தூய்மையான எரிசக்தியை ஊக்குவிப்பது மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை மேம்படுத்தச்

செய்வது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, திறன் மிக்க உற்பத்தி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் கூட்டு முன்னெடுப்புகள் ஆகியவை இந்த ஒத்துழைப்பில் அடங்கும்.



**Stalin Meets NRW President**

# தேசியச் செய்திகள்

## செமிகான் இந்தியா 2025




- இந்தியப் பிரதமர் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று புது டெல்லியில் செமிகான் இந்தியா 2025 என்ற நிகழ்வினைத் தொடங்கி வைத்தார்.
- ஒரு டிரில்லியன் டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற உலகளாவிய குறைக் கடத்தி சந்தையில் குறிப்பிடத்தக்கப் பங்கைக் கைப்பற்றுவதற்காக இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் ஐந்து புதிய குறைக் கடத்தி திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.
- இது பதினெட்டு பில்லியன் டாலர்கள் (1.5 லட்சம் கோடி ரூபாய்) முதலீடுகளுடன் மொத்தம் பத்து திட்டங்களாக அதிகரிக்கப்படுகிறது.

## நிவேஷக் தீதி கட்டம் II

- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (IEPFA) ஆனது கிராமப்புறப் பெண்களிடையே நிதி சார் கல்வியறிவை ஊக்குவிப்பதற்காக நிவேஷக் தீதியின்

இரண்டாம் கட்டத்தைத் தொடங்கியது.

- ❖ நிதி ரீதியாக தகவல் பெற்ற மற்றும் தகவமைப்பு கொண்ட கிராமப்புற சமூகத்தினை உருவாக்குவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- ❖ IEPFA, பெருநிறுவன விவகார அமைச்சகத்தின் (MCA) கீழ் செயல்படுகிறது.
- ❖ இந்தத் திட்டமானது, மக்களிடம் விழிப்புணர்வினை விரிவுபடுத்தியது, ஊடாடும் பயிற்சித் தொகுதிகளை அறிமுகப்படுத்தியது மற்றும் அடிமட்ட அமைப்புகளுடன் கூட்டுறவினை மேற்கொண்டது.
- ❖ இது பெண்கள் தலைமையிலான நிதி அதிகாரமளித்தல், சேமிப்பு, முதலீட்டுப் பாதுகாப்பு, மோசடித் தடுப்பு மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் கவனம் செலுத்தியது.
- ❖ கிராமங்கள் மற்றும் பஞ்சாயத்துகளில் நிதிக் கல்வியை கடைநிலை வரை வழங்குவதை இந்திய அஞ்சல் பண வழங்கீட்டு வங்கி (IPPB) ஆதரித்தது.




## குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) ஆணை, 2025

- ❖ மத்திய அரசு ஆனது, 2025 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) ஆணையை அறிவித்தது.
- ❖ இந்த உத்தரவானது, 2025 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டது.
- ❖ இது முந்தைய நான்கு சட்டங்களுக்கு மாற்றாக அமைந்தது:
  - கடவுச் சீட்டு (இந்தியாவிற்குள் நுழைதல்) சட்டம், 1920,
  - வெளிநாட்டினர் பதிவுச் சட்டம், 1939,
  - வெளிநாட்டினர் சட்டம், 1946, மற்றும்
  - குடியேற்றம் (சரக்குப் போக்குவரத்து நிறுவனங்களின் பொறுப்பு) சட்டம், 2000.
- ❖ இது புதிய சட்டத்தின் 33வது பிரிவின் கீழ் வெளியிடப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

- இந்த உத்தரவானது, கடவுச் சீட்டு, பயண ஆவணம் மற்றும் நுழைவு இசைவுச் சீட்டு விதிகளிலிருந்து விலக்குகளை வழங்குகிறது.
- இதில் பணியில் இருக்கும் இந்திய ஆயுதப்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.
- நேபாளம் அல்லது பூடான் எல்லைகள் வழியாக நுழையும் இந்தியக் குடிமக்களுக்கும் விலக்கு அளிக்கப்படுகிறது.
- தங்கள் நாட்டு எல்லைகள் வழியாக நுழையும் நேபாளம் மற்றும் பூடான் குடிமக்களுக்கும் இது பொருந்தும்.
- பதிவு செய்யப்பட்ட திபெத்திய அகதிகள் மற்றும் ஆப்கானிஸ்தான், வங்காள தேசம் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த சில சிறுபான்மைச் சமூகங்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்படுகின்றன.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னதாக இந்தியாவிற்குள் நுழைந்த இந்துக்கள், சீக்கியர்கள், புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள், சமணர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்துவர்கள் இதில் அடங்குவர்.
- 2015 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதி வரை இந்தியாவிற்குள் நுழைந்த பதிவு செய்யப் பட்ட இலங்கைத் தமிழ் நாட்டினரும் இதில் அடங்குவர்.





## வன் (சன்ரக்சன் ஏவம் சம்வர்தன்) திருத்த விதிகள், 2025

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) ஆனது 2025 ஆம் ஆண்டு வன் (சன்ரக்சன் ஏவம் சம்வர்தன்) திருத்த விதிகளை அறிவித்தது.
- 2023 ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) திருத்தச் சட்டத்தின் கீழ் இந்த விதிகள் அறிவிக்கப் பட்டன.
- இந்தப் புதிய விதிகளானது, முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஆரம்ப கட்ட 'பணி அனுமதி' வழங்க மாநில அரசுகளை அனுமதிக்கின்றன.
- முன்னதாக, அத்தகைய அனுமதிகளுக்கு மத்திய அரசிடமிருந்து ஒட்டு மொத்த நிலைகளுக்கான முதல் நிலை அனுமதி அவசியமாகும்.
- உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு, மாநில அரசுகளுக்கான வன நிலத்தை வழங்கும்


அதிகாரங்களை இந்த விதிகள் விரிவுபடுத்துகின்றன.

- பொது நலன் மற்றும் மூலோபாயத் திட்டங்கள் ஆனது தற்போது பரிவேஷ் தளம் வழியான இயங்கலை ஆய்வைத் தவிர்த்து நேரடியாக செயல்படுத்தப்படலாம்.
- இழப்பீட்டுக் காடு வளர்ப்பு (CA) நிலம் ஆனது, பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கப்பட வேண்டியதில்லை, ஆனால் வனத்துறைக்கு மட்டுமே மாற்றப்படும்.




## சர்வதேசச் செய்திகள்

### இந்தியா மற்றும் சீனாவின் நிலக்கரி அதிகரிப்பு




- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய புதிய நிலக்கரித் திறன் திட்டங்களில் சுமார் 87% பங்குடன், புதிய நிலக்கரி சார் மின் உற்பத்தித் திட்டங்களில் சீனாவும் இந்தியாவும் முன்னிலை வகிக்கின்றன.
- சீனா முதன்மையாக கடந்த கால எரிசக்தி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும், எரிசக்தி பாதுகாப்பிற்கும் ஒரு தீர்வாக சுமார் ஒரு தசாப்தத்தில் அதன் அதிகபட்ச விகிதமாக வெறும் ஆறு மாதங்களில் 21 GW திறன் கொண்ட புதிய நிலக்கரி திறன் அமைப்பை உருவாக்கியது.
- நிலக்கரி குவிப்பு இருந்த போதிலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் (சூரிய, காற்று, நீர்) விரைவான விரிவாக்கத்தினால், 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீனாவின் $CO_2$ உமிழ்வு ~1% குறைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா 5.1 GW திறன் கொண்ட புதிய நிலக்கரி ஆலைகளைத் தொடங்கியது என்பதோடு 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 92 GW

அளவிலான கூடுதல் நிலக்கரித் திறன் கொண்ட ஒரு பெரிய திட்டம் முன்மொழியப் பட்டது.

- இந்தியா அதன் மின்சார உற்பத்தியில் சுமார் 70% அளவிற்கு நிலக்கரியை இன்றும் பெரிதளவில் சார்ந்துள்ள நிலையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மிகத் தீவிரமாக விரிவுபடுத்தும் அதே வேளையில் (2025 ஆம் ஆண்டிற்குள் 220 GW நிறுவப்பட்டது) ஒரு "இரட்டைப் பாதை" எரிசக்தி உத்தியைக் கொண்டுள்ளது.
- நிலக்கரிப் பயன்பாட்டின் விரிவாக்கத்துடன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியின் இந்த இரட்டைப் பயன்பாட்டுத் தன்மை, வெப்பமயமாதலை 1.5°C ஆகக் கட்டுப்படுத்தும் பாரிசு உடன்படிக்கையின் இலக்கை அடைவதற்கான உலகளாவிய முன்னெடுப்பினைச் சிக்கலுக்கு உள்ளாக்குகிறது.

## SCO பிளஸ் உச்சி மாநாடு 2025

- சீனாவின் அதிபர் ஜி ஜின்பிங் 2025 ஆம் ஆண்டில் தியான்ஜினில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு பிளஸ் (SCO பிளஸ்) உச்சிமாநாட்டில் உலகளாவிய ஆளுகை முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தினார்.
- இந்த முன்னெடுப்பானது, இறையாண்மை சமத்துவம், சர்வதேசச் சட்டத்திற்கான மதிப்பு, பன்முகத் தன்மை மற்றும் மக்களை மையமாகக் கொண்ட கொள்கைகளை ஊக்குவிக்கிறது.
- 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட SCO, சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா உள்ளிட்ட யூரேசிய நாடுகளிடையே பிராந்தியப் பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அரசியல் பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்துகிறது.
- உலகளாவிய ஆளுகை முன்னெடுப்பு ஆனது, பாதுகாப்பு, நாகரிகம் மற்றும் மேம்பாடு குறித்த, ஒரு நியாயமான மற்றும் சமநிலையான சர்வதேச ஒழுங்கு முறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள ஜி ஜின்பிங்கின் முந்தைய திட்டங்களை அடிப்படையாகக் கொண்டது.



### தியான்ஜின் பிரகடனம் 2025

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்பினர் நாடுகளின் தலைவர்கள் 2025 ஆம் ஆண்டு உச்சி மாநாட்டின் போது தியான்ஜின் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டனர்.
- ஏப்ரல் 22 ஆம் தேதியன்று நடைபெற்ற பஹல்காம் தாக்குதல் மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்றத் தாக்குதல்கள் உட்பட அனைத்துப் பிரிவுகளில் உள்ள தீவிரவாதத்தினை இந்தப் பிரகடனம் கடுமையாக கண்டித்தது.
- தீவிரவாதம், பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான SCO அமைப்பின் உறுதியான உறுதிப்பாட்டை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### PRATUSH கதிர் வீச்சு மானி



- PRATUSH என்பது ஹைட்ரஜனில் இருந்து வரும் சமிஞ்ஞைகளைப் பயன்படுத்திப் பேரண்டத்தின் மறு அயனியாக்கத்தினை ஆராய்வது என்பதைக் குறிக்கிறது.
- இது இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நிதியளிக்கப்பட்ட இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட எதிர்கால விண்வெளிக் கதிர் வீச்சுமானி ஆய்வுப் பணியாகும்.
- முதல் நட்சத்திரங்கள் மற்றும் அண்டங்கள் உருவான சகாப்தமான காஸ்மிக் டான் எனப்படும் பேரண்டத்தின் ஆரம்பக் காலத்தினை ஆய்வு செய்வதே இந்த பணியின் நோக்கமாகும்.
- பூமியின் கதிர்வீச்சு குறுக்கீடுகள் மற்றும் அயனி மண்டலக் குறுக்கீட்டைத் தவிர்ப்பதற்காக, PRATUSH நிலவின் சுற்றுப்பாதையில், குறிப்பாக நிலவின் தொலை தூரத்தில் செயல்படும்.
- இந்த அமைப்பானது, ஒரு சிறிய முழு கட்டமைப்பினைக் கொண்ட ஒற்றைக் கட்டமைப்புக் கணினியை (SBC) பயன்படுத்தி வானலை வாங்கியைக் (ஆண்டெனா) கட்டுப்படுத்தி, FPGA (Field Programmable Gate Array) சிப் மூலம் தரவைச் செயலாக்குகிறது.
- சோதனைகள் ஆனது கதிர் வீச்சுமானி மிகக் குறைந்த இடையூறினை (சத்தத்தை) கண்டறிந்து அதன் உணர்திறனை நிரூபிக்கிறது என்பதைக் காட்டுகின்றன.
- SBC தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது எடை மற்றும் சக்தியைக் குறைத்து, விண்வெளிப் பயன்பாட்டிற்கு இந்தப் பணியை சாத்தியமானதாக்குகிறது.

## CEREBO கருவி




- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது (ICMR), அதிர்ச்சியினால் ஏற்பட்ட மூளைக் காயத்திற்காக (TBI) CEREBO எனப்படும் ஒரு சிறிய, ஊடுருவல் சாராத கண்டறியும் கருவியை அறிமுகப்படுத்தியது.
- இந்தச் சாதனம் ஆனது, மண்டையோட்டுக்குள் உள்ள இரத்தப்போக்கு மற்றும் திசுத் திரவ வீக்கம் (எடிமா) ஆகியவற்றினை ஒரு நிமிடத்திற்குள் கண்டறிவதற்காக அண்மை அகச்சிவப்பு நிறமாலை மற்றும் இயந்திர கற்றலைப் பயன்படுத்துகிறது.
- CEREBO ஆனது குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களில் பயன்படுத்தப் பாதுகாப்பானது.
- இது போபாலில் உள்ள AIIMS, பெங்களூருவில் உள்ள NIMHANS ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## டயோஸ்கோரியா பாலகிருஷ்ணானி


- கேரளாவின் வயநாடு மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் டயோஸ்கோரியா பாலகிருஷ்ணானி என்ற புதிய கிழங்கு இனம் அடையாளம் காணப் பட்டுள்ளது.
- தென்னிந்தியாவில் பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் வகைபிரித்தலுக்கு டாக்டர் பாலகிருஷ்ணன் அளித்தப் பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில் இந்தப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தக் கிழங்கு வகையானது காட்டுநாயக்கர் பழங்குடியினச் சமூகத்தினரிடையே உள்ளூரில் சோழ கிழங்கு என்று அழைக்கப்படுகிறது.
- இந்தப் புதிய இனம் ஆனது டயோஸ்கோரியாசியே குடும்பத்தின் கீழான டயோஸ்கோரியா இனத்தைச் சேர்ந்தது.
- இது வயநாடு பகுதியில் உள்ள பசுமையான காடுகளின் சோலைகளில் மட்டுமே காணப் படுகிறது.



## கடல் சார் பல்லுயிர்ப் பெருக்க ஒப்பந்தத்தின் தயாரிப்பு ஆணையம்

- கடல் சார் பல்லுயிர்ப் பெருக்க ஒப்பந்தத்தின் தயாரிப்பு ஆணையம் ஆனது 2025 ஆம் ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று அதன் இரண்டாவது அமர்வை அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நிறைவு செய்தது.
- இது UNCLOS (ஐக்கிய நாடுகளின் கடல் சார் சட்டம் குறித்த உடன்படிக்கை) உடன்படிக்கையின் கீழ் BBNJ (தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப் பெருக்கம்) ஒப்பந்தம் என்று முறையாக அழைக்கப்படுகிறது.
- இது 2023 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது பொதுவாக உயர் கடல்கள் என்று அழைக்கப்படுகின்ற தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டப் பகுதிகளுக்கு (ABNJ) பொருந்தும்.
- இது கடல் சார் பல்லுயிர்ப் பெருக்கத்தின் வளங்காப்பு மற்றும் நிலையான பயன்பாட்டை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஒப்பந்தமானது, கடல் சார் மரபணு வளங்கள், கடல் சார் பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் உட்பட பகுதி சார்ந்த மேலாண்மை கருவிகள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்தியா BBNJ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது ஆனால் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான தரவின் படி, அந்த ஒப்பந்தமானது இன்னும் அங்கீகரிக்கப் படவில்லை.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீடு 2025

- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீட்டினைப் பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் (IEP) வெளியிட்டது.
- 2025 ஆம் ஆண்டில் ஆசியாவின் பாதுகாப்பான நாடாக சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- குறைந்த அளவிலான குற்றம், கடுமையான சட்டங்கள் மற்றும் பயனுள்ள நிர்வாகத்திற்குப் பெயர் பெற்ற இது அமைதிப் பிரிவில் உலகளவில் 6வது இடத்தைப் பிடித்தது.
- 2025 ஆம் ஆண்டில் ஆசியாவின் இரண்டாவது பாதுகாப்பான நாடாக இடம் பெற்ற ஜப்பான், ஆசியாவில் ஒட்டு மொத்தமாக 9வது இடத்தையும், உலகளவில் 12வது இடத்தையும் பிடித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் ஆசியாவில் மூன்றாவது பாதுகாப்பான நாடாக இடம் பெற்ற மலேசியா, உலகளவில் 19வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஐஸ்லாந்து தொடர்ந்து 18வது ஆண்டாக உலகளவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து அயர்லாந்து 2வது இடத்திலும், நியூசிலாந்து 3வது இடத்திலும் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டிலிருந்த நிலையிலிருந்து மாறாமல் 2025 ஆம் ஆண்டில் இந்தியா உலகளவில் 115வது இடத்தில் உள்ளது,.
- பிராந்திய மோதல்கள், உள்நாட்டுப் பதட்டங்கள் மற்றும் நகர்ப்புறக் குற்றம் போன்ற பிரச்சினைகள் அதன் அமைதிக்கான மதிப்பெண்ணைப் பாதிக்கின்றன.

- தொடர்ச்சியான போர் ஈடுபாடு மற்றும் இராணுவமயமாக்கல் காரணமாக, 2025 ஆம் ஆண்டில் ரஷ்யா முதன்முறையாக உலகின் மிகக் குறைந்த அளவிலான அமைதி நிலவிய நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- தொடர்ச்சியான மோதல்கள் அதன் உள்நாட்டு உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பை பெரிதும் பாதிப்பதால், உக்ரைன் நாடானது உலகளவில் கடைசியில் இருந்து இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு குறியீட்டில் அமெரிக்கா 128வது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய அமைதியில் அமெரிக்கா, ஹோண்டுராஸ் (124வது), வங்காள தேசம் (127வது) மற்றும் உகாண்டா (126வது) ஆகியவற்றை விட பின்தங்கி உள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் மிகவும் இராணுவ மயமாக்கப் பட்ட நாடு பிரான்சு ஆகும்.
- 2025 ஆம் ஆண்டு குறியீட்டில் அமைதியில் ஒட்டு மொத்த முன்னேற்றத்தைக் கொண்ட ஒரே பிராந்தியம் தென் அமெரிக்கா மட்டுமே ஆகும்.
- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய அமைதி குறியீடு ஆனது உலகம் முழுவதும் பாதுகாப்பு, சமூக மோதல் மற்றும் இராணுவமயமாக்கல் நிலைகளை மதிப்பிட்டு, 163 நாடுகளை தரவரிசைப்படுத்துகிறது.
- அமைதியில் முதல் இடத்தில் உள்ள ஐஸ்லாந்து, 2025 ஆம் ஆண்டு உலக மகிழ்ச்சி அறிக்கையில் 3வது இடத்தைப் பிடித்துள்ளதோடு இது அமைதிக்கும் வாழ்க்கைத் திருப்திக்கும் இடையே வலுவான தொடர்பைக் காட்டுகிறது.


According to Global Peace Index 2025


| | | | |
|---|---|---|---|
| 1 | Iceland | 11 | Czechia |
| 2 | Ireland | 12 | Japan |
| 3 | New Zealand | 13 | Malaysia |
| 4 | Austria | =14 | Netherlands |
| 5 | Switzerland | =14 | Canada |
| 6 | Singapore | 16 | Belgium |
| 7 | Portugal | 17 | Hungary |
| 8 | Denmark | 18 | Australia |
| 9 | Slovenia | 19 | Croatia |
| 10 | Finland | 20 | Germany |

# இதரச் செய்திகள்

## ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

- கிழக்கு ஆப்கானிஸ்தானில் 6.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் தாக்கியதோடு இது முதன்மையாக குனார் மற்றும் நங்கர்ஹார் மாகாணங்களில் பாதிப்பினை ஏற்படுத்தியது.
- பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்கு ஆதரவளிப்பதற்காக இந்தியா மருந்துகள் மற்றும் சுகாதாரக் கருவிகள் உட்பட 21 டன் நிவாரண உதவிகளை அனுப்பியது.

❖ கண்டத் தட்டுகளின் (டெக்டோனிக்) எல்லைகளில் அமைந்திருப்பது மற்றும் அந்த நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் காணப்படும் எளிதில் பிளவுப்படக் கூடிய கட்டுமானப் பொருட்களின் மிகப் பரவலான பயன்பாடு காரணமாக ஆப்கானிஸ்தான் பூகம்பங்களுக்கு எளிதில் ஆளாகக் கூடியதாக உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★